**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP No.280/2023**

நாள் 24.04.2025

**ம.சா.1. எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

விபத்து குறித்து காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்து என்றால் நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது ஆலிவலம் காவல் நிலைய ஆய்வாளர் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார். அந்த வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டேன். நான் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிர் திசையிலிருந்த வந்த பேருந்தானது எனது வண்டியின் பக்கவாட்டில் மோதியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் விபத்து ஏற்பட்ட நாளில் மது அருந்திவிட்டு எனது மோட்டார் சைக்கிளை ஓட்டியதால் என்னுடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், நான் நஷ்ட ஈடு தொகை அதிகமாக பெற வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனக்கு மனுவில் கோரியபடி எந்த நஷ்ட ஈடு தொகையும் பிரதிவாதி கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.